**கொ.மு.சுட்டெண்**
**2022 செத்தெம்பர்**

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 செத்தெம்பரில் பணிகள் நடவடிக்கைகளுக்காக சிறிதளவு விரிவடைதலையும் தயாரிப்பு நடவடிக்கைகளுக்காக சுருக்கத்தினையும் காண்பிக்கின்றன**

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2022 செத்தெம்பரில் வீழ்ச்சியடைந்து மாதத்திற்கு மாதம் அடிப்படையில் தயாரிப்பு நடவடிக்கைகளில் பின்னடைவொன்றினை எடுத்துக்காட்டுகின்றது.** அதற்கமைய, தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது தொழில்நிலை மற்றும் வழங்குநர்களின் விநியோக நேரம் தவிர அனைத்து துணைச் சுட்டெண்களிலும் குறைவடைதல்களினால் தூண்டப்பட்டு முன்னைய மாதத்திலிருந்து 7.0 சுட்டெண் புள்ளிக்களைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 செத்தெம்பரில் 42.6 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் வீழ்ச்சிக்கு, உணவு மற்றும் குடிபானங்கள் மற்றும் புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறைகளின் தயாரித்தல் பிரதான காரணமாக அமைந்தது. நுகர்வோரின் கொள்வனவு சக்தி சீர்குலைவு காரணமாக கேள்வியில் வீழ்ச்சி காணப்பட்டதென உணவு மற்றும் குடிபானங்கள் தயாரித்தல் உள்ளடங்கலாக உள்நாட்டுச் சந்தைகளுக்கு பிரதானமாக வழங்கல் செய்கின்ற தயாரிப்பு நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். மேலும், பிரதான ஏற்றுமதி அடைவிடங்களில் பொருளாதார மந்த அச்சம் காரணமாக நலிவடைந்த கேள்வியினை தாம் எதிர்கொண்டதாக ஏற்றுமதியினை நோக்காகக்கொண்ட கைத்தொழில்களைச் சார்ந்த தயாரிப்பாளர்கள் குறிப்பிட்டனர். எனினும், புடவை மற்றும் ஆடைத் தயாரிப்புத் துறையில் காணக்கிடைத்த மேம்பாட்டுக்கு மத்தியில் தொழில்நிலையானது முன்னைய மாதத்தின் மட்டத்திலேயே பரந்தளவில் காணப்படுகின்றது. ஊழியர்கள் பற்றாக்குறையிலிருந்து ஆடைத் துறை அவ்வப்போது வருந்தியமையினால் ஆரோக்கியமான உட்பாய்ச்சலிருந்து அனுகூலமடைந்து மந்தமான தோற்றப்பாட்டிற்கு மத்தியிலும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முனைந்துள்ளது. 2022 செத்தெம்பரில் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் காணப்பட்ட வீழ்ச்சிக்கு இணங்க, கொள்வனவுகளில் இருப்பு குறைவடைந்த அதேவேளை, வழங்குநர்களின் விநியோக நேரம் சிறிதளவு நீட்சியடைந்தது. அண்மைக்காலத்தில் சில மேம்பாடு அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், வெளிநாட்டுச் செலாவணி குறைவாகக் கிடைக்கப்பெறுகின்ற தன்மையின் காரணமாக மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் தொடர்ச்சியாக இன்னல்களை அனுபவித்ததாக சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.


| மாறி | ஓகத் | செத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **49.6** | **42.6** | **-** | **வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்** |
| கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | | | |
| புதிய கட்டளைகள் | 49.0 | 37.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 49.0 | 39.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 52.0 | 50.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 51.5 | 38.9 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 47.5 | 51.0 | + | சுருக்கத்திலிருந்து நீட்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள், வரவிருக்கும் மாதங்களில் கேள்விப்பக்கத் தடைகள் தீவிரமடையுமென எதிர்பார்த்து, 2022 செத்தெம்பரில் சீர்குலைந்தன.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 42.6**

2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 7.0 சுட்டெண் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் ஓகத்திலிருந்து 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2022 செத்தெம்பரில் 49.8 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் ஐக்கிய அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை, இந்தியாவில் மெதுவான வீதத்தில் அதிகரித்துள்ளது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 ஒத்தோபர் 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண், 2022 செத்தெம்பரில் 51.2 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களினால் தூண்டப்பட்டு **பணிகள் துறையில் சிறிதளவான விரிவடைதலினை எடுத்துக்காட்டுகின்றது.**

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, நிதியியல் பணிகள், தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் மற்றும் கல்வித் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் 2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் விரிவடைந்தன.

சக்தி நெருக்கடி தளர்வடைந்து பொருளாதார நிலைமைகளில் மேம்பாடுகளுக்கு மத்தியில், பணிகள் துறையின் தொழில் நடவடிக்கைகள் செத்தெம்பர் மாத காலப்பகுதியில் மேலும் அதிகரித்தன. அதற்கமைய, நிதியியல் பணிகள், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், கல்வி மற்றும் காப்புறுதி துணைத் துறைகள் தொடர்புபட்ட தொழில் நடவடிக்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மேம்பாடுகளைப் பதிவுசெய்தன. எவ்வாறிருப்பினும், உண்மைச் சொத்துக்கள், அஞ்சல், கூரியர், மனித நலம் துணைத் துறைகளின் தொழில் நடவடிக்கைகள் மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

புதிய ஆட்சேர்ப்புகள் நிறுத்தப்பட்டுள்ளமைக்கு மத்தியில் அதிகரிக்கின்ற பதவி விலகுதல்கள் மற்றும் ஓய்வுபெறுதல்கள் காரணமாக தொழில்நிலை செத்தெம்பரில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, ஊழியர்கள் எதிர்கொண்ட போக்குவரத்து இன்னல்கள் தளர்வடைந்தமையுடன் நிலுவையிலுள்ள பணிகள், மாத காலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

| மாறி | ஓகத் | செத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **51.7** | **51.2** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 57.3 | 56.3 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 53.1 | 58.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 43.3 | 39.6 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 47.8 | 44.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 57.2 | 57.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதார நிலைமைகளில் மேம்பாடு தொடர்பிலான அதிகரித்த சாதகமான எண்ணப்பாங்கு மற்றும் எதிர்வரும் பண்டிகைப் பருவகாலம் என்பவற்றுடன் இணைந்து அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேலும் மேம்பட்டன. எவ்வாறிருப்பினும், தமது வியாபாரத் தொழிற்பாடுகள் மீது எதிர்மறையான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய வழங்கல்பக்க தடைகள், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகரிப்பு, சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டை அறிமுகப்படுத்தல் அத்துடன் நேரடி வரிகளை அதிகரித்தல் என்பன பற்றி தமது கரிசனைகளை பல பதிலிறுப்பாளர்கள் வெளிப்படுத்தினர்.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 51.2**

2022 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 ஓகத்தில் 49.3 இலிருந்து 2022 செத்தெம்பரில் 50.1 இனைப் பதிவுசெய்து, உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் நிலைபெறுதலினைக் காண்பிக்கின்றது.

இந்தியா, மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 செத்தெம்பரில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தன எனக் காண்பித்த அதேவேளை சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளில் இச்சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியதுடன் ஐக்கிய இராச்சியம் மாற்றமடையாத மட்டத்தினைக் காண்பித்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2022 ஒத்தோபர் 15இல் உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.